# பணிநிறைவு வாழ்த்து!

## திரு ஆர். யமுனைத் துறைவன் - 28-02-2025

பணிநிறைவு என்பதோர் பயணத்தின் இறுதி முணையம்!
பணியென்னும் நிலையே வாழ்வின் சீர்மிகுக் காலமாகும்!
அணியாகத் தொடங்கும் இல்லறம் அடுத்து மக்கள் யாவும்,
மணியாக வாழ்வின் களத்தில் மறுவிலாச் பெருமை செய்யும்!

கனவுகளில் மிதந்து எழுந்து கல்வியும் கற்றுத் தேர்ந்து,
மனமது நிறைவைக் காண பணியதனைத் தான் தேடும்!
நனியதாய் பணியும் ஒன்று நலமுடன் பெற்ற பின்னே,
கனமின்றி தொடரும் நாட்கள் காலத்தால் எழுச்சி கொள்ளும்!

காட்சிகள் மாற களங்களும் மாற காலமும் நகர்ந்திட,
மாட்சிமையாக சிலவும் பெற்று, மனமதும் மகிழ்ந்திட,
நீட்சியாய் சிலநாள் நிம்மதி தொலைந்திட மருங்கி,
ஆட்சியாய் மனமும் அலைக்கழிக்கத் தொடங்கும்!

ஆனந்தம் என்பது மனம் கொள்ளும் நிலையே!
வானத்தின் கீழே வாழும் வரையில் எதுதான் இன்பம்?
வானவில் அழகைகூட்ட அடுத்து மழையாய் ஆகிட,
கானகத்தின் அழகைக் கடும்புலி சிதைக்கும்!

கண்டும் காணாது, கற்பனையில் சிதறாது நாளும்
கண்ணில் காட்சியில் கடவுளைக் காண்போமோ?
மண்ணில் வாழ்விதனின் மகுடமாம் பணிநிறைவு!
எண்ணிய வழியில் இனிப் பயணம் தொடர்ந்திடலாம்!

மன்னியக் கனவுகளை மகிழ்ந்து தேடிடலாம்!
புன்னகை மனம் கொண்டார் புன்மையைக் காணாரே!
என்னாளும் இதழ்கடையில் இழையும் சிரிப்போடு,
நன்மகனார் **யமுனைத்துறைவன்** அவர் நடை பயில்வாரே!

பொன்மகன் இத்திங்கள் பொலிவுடன் நிறைவுகாண,
நன்மக்கள் நண்பரென அனைவரையும் அழைத்து,
இன்றொரு விருந்திட்டு யாவரையும் மகிழ்த்திடவே,
நன்மகனுக்கு நாமும் சொல்வோம் வாழ்த்துதானே!

நலிவில்லா நிலையுடனே நன்மை பலவும் கண்டு,
பொலிவான பணிநிறைவில் பூரித்து நிறைந்திருந்து,
மலியும் இன்பம் யாவுடனும் பிணியற்று வாழ்ந்திடுக!
சலியாது இன்பம் யாவும் சாற்றுவான் பரம்பொருளே!
அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
**15-02-2025** (மதியம் 01-35)
**(மேனாள் மதிப்பீட்டு அதிகாரி, சுங்க இல்லம்)**